# அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி)

**கோயம்புத்தூர் – 641 018**

## இரண்டாம் பருவம்

## பொதுத்தமிழ் தாள் – 2

**இளங்கலை – அறிவியல் பட்டம் பயிலும்
முதலாமாண்டு மாணவர்களுக்குரியது**

(2015–2018 ஆம் கல்வியாண்டுக்குரியது)

பதிப்பாசிரியர்கள்

முனைவர் சந்திரா கிருஷ்ணன்
முனைவர் இரா. செல்வராஜ்
முனைவர் மா. சுப்புரத்தினம்
முனைவர் சோ. குருசாமி
முனைவர் ச. கலைச்செல்வன்
முனைவர் இ. சேனாவரையன்

வெளியீடு

தமிழ்த்துறை
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி)
கோயம்புத்தூர் – 641 018

நின்ற வேங்கையெவ் வுழியென நிகழ்த்தின ரவனும்
வென்றி வாளர சேயணித் தெனவிளம் பினனே.

8. இலங்கு செங்கதிர் வேலொரு கரத்தினி லேந்தி
நிலங்கொ ளப்பரந் தரியமெய் யொளிபுடை நிலவ
நலங்கொள் குங்குமத் தொடைபுரண் டசைந்திட
நடந்தா
ருலங்கொ டோண்முகம் மதுபுலி யுறைநெறி யுழையில்.

9. மாதி ரத்துறை கேசரி நிகர்முகம் மதுதம்
பூத ரப்புய மசைதரப் புளகிதத் தோடுங்
காது செங்கதிர் வேல்வலக் கரத்திடை கவின
வீதி வாய்வரக் கண்டது பெருவரி வேங்கை.

10. கண்ட போதினில் வால்குழைத் தரியமெய் கலங்கிக்
கொண்டு மென்மெல நடந்துதன் பெருஞ்சிரங் குனித்துத்
தண்ட ளிர்ப்பதத் தெரிசனைக் கெனச்சலா முரைத்துத்
தெண்ட னிட்டது வள்ளுகிர் திண்டிறற் புலியே.

11. நலன்பெ றுங்குறை சிகளினில் வந்த நாயகமே
நிலம்ப ரந்துதீன் பெருகிட வெழுந்தநீ ணிலவே
புலன்க ணின்புறக் கண்டனன் களித்தனன் பொருவில்
பலன்பெ றும்படி யாயின னெனப்பகர்ந் ததுவே.

12. வந்து தெண்டனிட் டெழுந்துவாய் புதைத்துற வணங்கிப்
புந்தி கூர்தரப் போற்றிய வள்ளுகிர்ப் புலியை
மந்த ராசல முகம்மது நனிமன மகிழ்ந்து
சந்த மென்மணிக் கரத்தினாற் சிரமுகந் தடவி.

13. இன்று தொட்டிவ ணெறியினி லுயிர்செகுத் திடுவ
தன்று வேறொரு காட்டினிற் புகுகவென் றறைந்த
மன்ற றுன்றிய முகம்மதின் மலரடி வணங்கி
நன்று நன்றெனப் போற்றியே நடந்தது வேங்கை.

14. படுகொ லைப்புலி மெய்யுறப் பணிந்திவர் பாதத்
தடிவ ணங்கிய காரண வதிசய மதனா
லுடைய வன்றிருத் தூதரே யுண்மையென் றுன்னித்
தினமு டைத்தநெஞ் சாயின ரறிவினிற் றெளிந்தோர்.

❊❊❊

*காண்டங்களையும், 92 படலங்களையும், 5027 விருத்தங்களையும் உடையது. கம்பராமாயணம், பெரியபுராணம் முதலாய காப்பியங்களை அடியொற்றி நாட்டுப்படலம், நகர்ப்படலம் முதலாய காப்பியக் கூறுகளோடு சீறாப்புராணம் எழுதப்பட்டுள்ளது.*

**கலிநிலைத்துறை**

1. படர்ந்த தெண்டிரைப் பெருக்கெடுத் தெறிநதிப் பரப்பைக்
 கடந்து கான்பல கடந்தரு நெறிசெலுங் காலை
 கொடுந்த டக்கரித் திரளெனுங் குழுவினு ளொருவ
 னடைந்து சீரகு மதினடி தொழுதறை குவனால்.

2. நிகழுந் தாரையிற் காவதத் துள்ளுறை நெடுநீ
 ரகழி போன்றவோ ரோடையுண் டதனினுக் கணித்தாய்ப்
 புகலு தற்கரி தடவியுண் டவ்வுழிப் பொருந்தி
 யுகளு மாங்கொரு பாதகக் கொடுவரி யுழுவை.

3. நீண்ட வானிலம் புடைத்திடக் கிடந்துட னிமிர்ந்து
 கூண்ட கான்மடித் திருவிழி கனல்கள் கொப்பிளிப்பப்
 பூண்ட வெள்ளெயி றிலங்கிட வாய்புலால் கமழ
 வீண்டு முட்செறி வனத்திடை சினத்தொடு மிருக்கும்.

4. நிரம்பும் வள்ளுகிர் மடங்கலி னினங்களி னிணமுண்
 டிரும்ப னைக்கைமும் மதகரிக் கோட்டினை யீழ்த்திட்
 டுரம்பி ளந்துதி ரங்களை மாந்திநின் றுறங்கா
 தரும்பெ ருங்கிரி பிதிர்ந்திட வுருமினு மலறும்.

5. அதிர்ந்தி டுந்தொனி செவியுற வடவியி லடைந்த
 முதிர்ந்த மேதியுங் கவையடிக் கேழலு முழுதும்
 பொதிந்த மெய்மயி ரெண்கினங் களுமரைப் போத்தும்
 பதிந்த காறடு மாறிட வீழ்ந்துடல் பதைக்கும்.

6. புறந்த யங்குமஞ் சிறையறு பதப்பொறிச் சுரும்பு
 திறந்து தேனையுண் டணிதிகழ் தொடையணி திறலோய்
 மறந்த யங்குவேன் மாந்தரவ் வேங்கையின் வாய்ப்பட்
 டிறந்த தன்றியொட் டகம்பரி யெண்ணிலக் கிலையே.

7. என்ற வாசகஞ் செவிபுக வெழிலிரு புயமுங்
 குன்று போலுற வீங்கின முறுவல்கொண் டிடராய்



## இளங்கலை அறிவியல் பட்டம் பயிலும் முதலாமாண்டு மாணவர்களுக்குரியது

## பாடத்திட்டம்

## தமிழ் – தாள் - II

(விழுமியம் : செய்யுள், உரைநடை – மொழித்திறன் – படைப்பாற்றல்)

**(Credits = 3 மதிப்பெண் : 75 + 25 = 100)**

**அலகு 1 : செய்யுள்**

1. தேவாரம் – திருநாவுக்கரசர் – திருவாலங்காட்டுப் பதிகம் (10 பாடல்)
2. திருவாசகம் – மாணிக்கவாசகர் – பிடித்த பத்து (10 பாடல்)
3. நாலாயிர திவ்ய பிரபந்தம் – எட்டாம் பத்து (11 பாடல்கள்)
4. வில்லி பாரதம் – வில்லிபுத்தூரார் – மற்போர் சருக்கம் (10 பாடல்கள்)

**அலகு 2 : செய்யுள்**

1. திருவருட்பா வள்ளலார் – பிரிவாற்றாமை (6–ஆம் திருமுறை)
2. முக்கூடற்பள்ளு – மழைக்குறி (3 பாடல்கள்)
3. தேம்பாவணி – மழைவளம் (9 பாடல்கள்)
4. சீறாப்புராணம் (உமறுப்புலவர்) புலிவசனித்த படலம் (14 பாடல்கள்)

**அலகு 3 : உரைநடை**

"சிற்பியே உன்னைச் செதுக்குகிறேன்" (வைரமுத்து)

**அலகு 4 : மொழித்திறன்**

1. இலக்கணம் : 1. தொகை நிலை 2. தொகா நிலை
2. உரைகள் : 1. வானொலிச் சிற்றுரை
 2. நேர்முக வருணனை
 3. நேர்காணல்
 4. விவாதம்
 5. கலந்துரையாடல்
3. இலக்கிய வரலாறு : 1. சிற்றிலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்
 2. பக்தி இலக்கியங்கள் : சைவம், வைணவம், கிறித்தவம், இசுலாம்
 3. உரைநடையின் தோற்றமும், வளர்ச்சியும்

அலகு 5 : படைப்பாற்றல்

1. கற்பனைச் சந்திப்புகள் (வரலாற்றிலோ புராணத்திலோ காவியத்திலோ இன்றைய சூழலிலோ வரும் – மனிதர்கள் இருவர் சந்திப்பது போல)

(எ.கா)

(வாரியாரும் பெரியாரும், பொற்கை பாண்டியனும் மனுநீதிச் சோழனும், புரட்சிக்கவியும் வால்ட் விட்மினும், பாரதியும் பாரதிதாசனும்)

2. நெருக்கடியைத் தெரிவித்து விரும்பும் வடிவில் திறமாக வெளியிடல்

(எ.கா)

(வெளியூர்ப் பயணம் – பயணச்சீட்டுக் கிடைக்காத நிலையில் வரும் நெருக்கடி, கல்வி நிலையம் – விரும்பிய படப்பிடிப்பில் இடம் கிடைக்காமையால் ஏற்படும் நெருக்கடி, விருந்தினரைப் பேணல் – எதிர்பாராத நேரத்தில் விருந்தினர் வரும்போது ஏற்படும் நெருக்கடி, பொது வேலை நிறுத்தம் – வேலை வாய்ப்புக்குரிய நேர்காணல் செல்வதற்கு ஏற்படும் நெருக்கடி)

3. 1. பல்வகை விண்ணப்பங்கள் : (அலுவலக நிலை)

   2. பல்வேறு மடல்கள் : (பொதுவான நிலை)



வெள்ளி நீள்தொடர் விகித்ததைப் பிடித்தெனச் சூழத்
துள்ளி வீழ்உயர் தூங்கிய அருவியின் தோற்றம்.

6. ஒள்நு ரைத்தெரி உமிழ்ந்தவிர் இனமணி வரன்றித்
தெள்நு ரைத்தெழும் திரைத்திரள் வயின்தொறும் புகுந்து
வள்நு ரைத்தெதிர் வதிந்தெலாம் சாய்த்தவை கொடுப்போய்ப்
புண்நு ரைத்தடக் கொள்ளைசெய் பொருந்தலர் போன்றே.

7. விரைகி டந்துஅசை வீயுமிழ் மதுவினால் பெருகி
நிரைகு டந்தெழும் சோலையும் கழனியும் நிறைப்ப
வரைகி டந்திழி வளம்புனல், எங்கணும் உலவில்
திரைகி டந்துயிர் சீர்த்துறுப்பு உலாவிய போன்றே.

8. அஞ்சு கிலாஎதிர் அடுக்கிய கல்எலாம் கடந்தே
எஞ்சு இலாஎழில் இமைத்தநீள் மருதமும் நீக்கித்
துஞ்சு இலாநதி தொடர்ந்தகல் கருங்கடல் நோக்க
விஞ்சை யாரெல்லாம் வெறுத்துவீ டிவரிய போன்றே.

9. மலையின் நேர்அறல் மலியநால் திணையருந்தியபின்
அலையின் நேர்உறல் அவனிதன் மகர்க்கெலாம் ஊட்டி
முலையின் ஏர்உறீஇ விஞ்சுபால் முடுகலில் உடுத்த
கலையின் ஏற்உறீஇ களிப்பொடு சிந்துவ போன்றே.

## சீறாப்புராணம்

### 4. புலிவசனித்த படலம்

**- உமறுப்புலவர்**

***உ**மறுப்புலவர் இயற்றிய சீறாப்புராணம் பரவலாக அறியப்படுகின்ற காப்பியம். இவருடைய காலம் கி.பி. 17 ஆம் நூற்றாண்டு. இக்காப்பியம் தவிர முதுமொழிமாலை என்ற நூலையும் அவர் இயற்றியுள்ளார். முகம்மது நபியின் வரலாற்றைக் கூறுகின்ற சீறாப்புராணம், விலாதத்துக் காண்டம், நுபுவத்துக்காண்டம், ஹிஜ்ரத்துக் காண்டம் என்ற மூன்று*

*காண்டம், மூன்றாவது காண்டம் என்று மூன்று பெரும்பிரிவுகளைக் கொண்டது. காண்டத்திற்குப் பெயரிடப் படவில்லை. ஒவ்வொரு காண்டத்திலும் பன்னிரண்டு படலங்கள் உண்டு. படலம் என்பது காப்பியத்தின் உட்பிரிவு ஆகும். அடுத்து வரும் படலத்தோடு கதைத்தொடர்பு கொண்டது. நாட்டுப்படலம் என்பது சூசை என்னும் வளன் பிறந்த யூதேயா நாட்டின் இயற்கை வளத்தைக் கூறுவது.*

**மழைவளம்**

1. புள்ளு லாம்விசும்பு இடைதொறும் பொரும்படை பொருவ
   வெள்ளு லாம்மழை வெண்கொடி உருக்கொடு விளங்கித்
   தெள்ளு லாம்திரை திளைப்பவுண்டு எழுந்துயர் பரந்து
   பள்ளு லாம்கரு மதகரி இனமெனத் தோன்ற.

2. போர்பு றம்கொடு பொருந்தலர் உரத்தில்தேய்ந்து ஒளிர்வேல்
   சீர்பு றம்கொடு திசைதொறும் இருளற மின்னி
   வார்பு றம்கொடு வளர்முரசு ஒலியென அதிர்ந்து
   நீர்பு றம்கொடு நீல்முகில் முழங்கின மாதோ.

3. படையெ னச்செருப் பகைதரப் படர்ந்தன அல்லால்
   கடையெ னச்செறி கருணையோடு உஞற்றிய வள்ளர்
   கொடையெ னச்செழும் குன்றொடு வயின்தொறும் குளிர
   மிடையெ னச்சொரி வியன்முகில் வரையில் பொழிவ.

4. படிந்த நூல்அவை பயன்பட விரித்துஉரைப் பவர்மேல்
   தடித்த நீல்முகில் தவழ்தலை பொலிந்தபொன் மலையே
   குடித்த நீர்எலாம் கொப்புளித்து அமுதுஎன அருவி
   இடித்து அறாஒலி எழத்திரை எறிந்துருண்டு இரிவ.

5. புள்ளி மால்வரை பொன்னுலகு இடத்துஎடுத்து உய்த்தல்
   உள்ளி வான்விடும் வடம்எனத் தாரைகள் ஒழுக



# அலகு – I
# செய்யுள்

தாழைக் குடைக் கொங்கணியும்
வேளைக்கே வேண்டும்
பக்கமேயுஞ் சூழ்கம்புஞ்சு
ருக்க வாங்கிடும் - சீலைப்
பந்தமும் விளக் கெண்ணையும்
முந்தவே தேடும்
முக்கூடல் அழகர் பண்ணை
மிக்க சேரியில் - பள்ளர்
முழுதுங் குரவை யிட்டே
எழுவோ மடா.

## தேம்பாவணி

### 3. நாட்டுப்படலம் (நீர்வளம், நிலவளம்)

**- வீரமாமுனிவர்**

*வீரமாமுனிவர் இத்தாலி நாட்டில் காஸ்திரியோனா என்னும் சிற்றூரில் 1680 ஆம் ஆண்டு பிறந்தார். இவரது இயற்பெயர் கொன்ஸ்டான்ஸ் ஜோசப். கொன்ஸ்டான் என்னும் சொல்லுக்குத் தைரியம் என்பது பொருள். தமிழ்நாட்டுக்கு வந்த பின் தம் பெயரைத் தைரியநாதசாமி என மாற்றிக் கொண்டார். இவரது தமிழ்ப் புலமையையும் சமயப் பணியையும் உணர்ந்த தமிழ்ச் சான்றோர் வீரமாமுனிவர் என்றே அழைத்தனர்.*

*1710 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு வந்த வீரமாமுனிவர் தமிழ்நாட்டில் தொண்டாற்றிய இயேசு சபைக் குருமார்களுடன் சேர்ந்தார். தமிழ் மொழியை நன்கு பயின்றார். இலக்கண இலக்கியங்களில் பெரும்புலமை பெற்றார். சமய நூலைத் தமிழுக்கு தமிழராக இருந்து போதிக்க வேண்டும் என்ற திருச்சபையின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் அருந் தொண்டாற்றினார். 37 ஆண்டுகள் தமிழ்நாட்டில் சமயப் பணியும் தமிழ் பணியும் புரிந்த வீரமாமுனிவர் அம்பலக்காடு என்னும் இடத்தில் 1747 ஆண்டில் காலமானார். இத்தாலி நாட்டிலிருந்து தமிழ்நாட்டுக்கு சமயத் தொண்டாற்றினார். வீரமா முனிவர் புகழ் இன்று தேம்பாவணி காப்பியத்தில் வாழ்கிறது. 3615 பாடல்கள் கொண்ட காப்பியம். மூன்று காண்டங்களைக் கொண்டது. முதற்காண்டம், இரண்டாம்*

## 2. மழைக்குறி

**கலிப்பா**

1. முத்திதர வந்ததிரு முக்கூடல் மாதவர்தாள்
பத்திமற வாதபண்ணைப் பச்சேரிப் பள்ளரெல்லாம்
புத்தியொடு தெய்வநிலை போற்றியபின் வானமுகில்
எத்திசையும் பெய்யமழை யின்குறியுண் டாகியதே.

**சிந்து**

இராகம் : ஆனந்தபைரவி தாளம் : அடதாளம்

2. ஆற்று வெள்ளம் நாளை வரத்
தோற்றுதே குறி - மலை
யாள மின்னல் ஈழ மின்னல்
சூழ மின்னுதே
நேற்று மின்றும் கொம்பு சுற்றிக்
காற்றடிக் குதே - கேணி
நீர்ப்படு சொறித் தவளை
கூப்பிடு குதே.

சேற்று நண்டு சேற்றைக் குழைத்
தேற்றடைக் குதே - மழை
தேடியொடு கோடி வானம்
பாடி யாடுதே
போற்று திரு மாலழகர்க்
கேற்றமாம் பண்ணைச் - சேரிப்
புள்ளிப் பள்ளர் ஆடிப் பாடித்
துள்ளிக் கொள்வோமே.

3. இக்கரைக் காலிற் பொருநை
யக்கரைக் காலின் - மழைக்
கேம மின்றிச் சாம மின்றி
நாமல்லோ போவோம்
தக்க தோணி யைத்துறையிற்
சிக்கெனக் கட்டும் - படல்



# தேவாரம்

## 1. திருவாலங்காட்டுப் பதிகம்

**- திருநாவுக்கரசர்**

*திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் புகழனார்க்கும் மாதினியார்க்கும் மகனாகப் பிறந்தவர். இயற்பெயர் மருணீக்கியார். இளம் வயதில் பெற்றோரை இழந்ததால் தமக்கையார் திலகவதியாரால் வளர்க்கப்பட்டார். சமண சமயத்தில் சேர்ந்து தருமசேனர் என்ற பெயரில் வாழ்ந்து வந்தார். கடுமையான சூலை நோயால் வருந்திய சமயம் தமக்கையாரைத் தேடிவர அவர் அளித்த திருநீற்றால் நோய் நீங்கப்பெற்று மீண்டும் சைவ சமயம் சார்ந்தார். 4, 5, 6 ஆம் திருமுறைகள் பாடியுள்ளார். பாடிய பாடல்களில் கிடைத்துள்ள பாடல்கள் 3066.*

**தல விளக்கம் :** *தொண்டை நாட்டுத் தலம் 32இல் இது, 15ஆவது திருத்தலம். மூவர் பெருமக்கள் பாடல் பெற்றது. வடாரண்யம் என்னும் பெயரும் உண்டு. இறைவன் காளியுடன் நடனமாடிய தலம். ஈசன் உருத்திர தாண்டவம் புரிந்த பதி. ஐந்து சபைகளுள் இது இரத்தின சபை. கார்க்கோடன், சுநந்த முனிவர் பூசித்தது (வடம்-ஆல்)*

*மற்றும் முதல் திருமுறை பதிகம் எண் 45 காண்க.*

**சுவாமி** : *தேவர் சிங்கப்பெருமான், வடாரண்யேஸ்வரர், ஆலங்காட்டு அப்பர், ஊர்த்துவதாண்டவேஸ்வரர்.*

**அம்பிகை** : *வண்டர் குழலி*

**தல மரம்** : *பலா, ஆல்*

**தீர்த்தம்** : *முத்தி தீர்த்தம்*

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

1. **வெள்ளநீர்ச் சடையர் போலும்
விரும்புவார்க்கு எளியர்போலும்
உள்ளுளே உருகி நின்றங்கு
உகப்பவர்க்கு அன்பர்போலும்
கள்ளமே வினைகள் எல்லாம்
கரிசறுத் திடுவர் போலும்
அள்ளல்அம் பழனைமேய
ஆலங்காட்டு அடிகளாரே.**

2. செந்தழலுருவர் போலும்
சினவிடை யுடையர் போலும்
வெந்தவெண் ணீறு கொண்டு
மெய்க்கணிந் திடுவர் போலும்
மந்தமாம் பொழில் பழனை
மல்கிய வள்ளல் போலும்
அந்தமில் அடிகள் போலும்
ஆலங்காட்டு அடிகளாரே.

3. கண்ணினாற் காம வேளைக்
கனல்எழ விழிப்பர் போலும்
எண்ணிலார் புரங்கள் மூன்றும்
எரியுணச் சிரிப்பர் போலும்
பண்ணின்ஆர் முழவம் ஓவாப்
பைம்பொழில் பழனை மேய
அண்ணலார் எம்மை யாளும்
ஆலங்காட்டு அடிக ளாரே.

4. காறிடு விடத்தை யுண்ட
கண்டர்எண் தோளர் போலும்
தூறிடு சுடலை தன்னிற்
கண்ணவெண் ணீற்றர் போலும்
கூறிடும் உருவர் போலும்
குளிர்பொழிற் பழனை மேய
அண்ணலார் எம்மை யாளும்
ஆலங்காட்டு அடிக ளாரே.

5. பார்த்த னோடு அமர்பொருது
பத்திமை காண்பர் போலும்
கூர்த்தவாய் அம்பு கோத்துக்
குணங்களை அறிவர் போலும்
போர்த்துமோர் ஆவ நாழி
அம்பொடும் கொடுப்பர் போலும்
தீர்த்தமாம் பழனை மேய
திருவாலங் காட னாரே.



11. தருணமிஞ் ஞான்றே சுத்த சன்மார்க்கத்
தனிநெறி யுலகெலாந் தழைப்பக்
கருணையுஞ் சிவமே பொருளெனக் கருதுங்
கருத்துமுற் றெம்மனோர் களிப்பப்
பொருணிறை யோங்கத் தெருணிலை விளங்கப்
புண்ணியம் பொற்புற வயங்க
அருணயந் தருள்வாய் திருச்சிற்றம் பலத்தே
அருட்பெருஞ் ஜோதியென் னரசே.

12. என்னுள வரைமே லருளொளி யோங்கிற்
றருளிர வொழிந்தது முழுதும்
மன்னுறு மிதய மலர்மலர்ந் ததுநன்
மங்கல முழங்குகின் றனசீர்ப்
பொன்னியல் விளக்கம் பொலிந்தது சித்திப்
பூவையர் புணர்ந்திடப் போந்தார்
சொன்னநற் றருண மருட்பெருஞ் ஜோதி
துலங்கவந் தருளுக விரைந்தே.

13. வந்தருள் புரிக விரைந்திது தருணம்
மாமணி மன்றிலே ஞான
சுந்தர வடிவச் சோதியாய் விளங்கும்
சுத்தசன் மார்க்கசற் குருவே
தந்தருள் புரிக வரமெலாம் வல்ல
தனியருட் சோதியை யெனது
சிந்தையிற் புணர்பித் தென்னொடுங் கலந்தே
செய்துவித் தருள்கசெய் வகையே.

## முக்கூடற்பள்ளு

*முக்கூடற்பள்ளி தலைசிறந்த நூலாகக் கருதப்படுகிறது. இதன் காலம் கி.பி. 1680. நெல்லை மாவட்டத்தில் தாமிரபரணி, சிற்றாறு, ஒரு காட்டாறு என மூன்று ஆறுகள் கலக்குமிடம் முக்கூடல். இன்று இவ்வூர் சீவலப்பேரி என்ற பெயரால் அறியப்படுகிறது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. மூத்தபள்ளி திருமாலை வழிபடுபவள். இளையபள்ளி சிவனை வழிபடுபவள். இருவரும் தமக்கிடையேயுள்ள முரண்பாட்டைத் தாம் வணங்கும் கடவுள் மேலேற்றி ஏசிக் கொள்கின்றனர்.*

7. அரைசெலாம் வழங்குந் தனியர சதுநின்
அருளர செனவறிந் தனன்பின்
உரைசெய்நின் னருண்மே லுற்றபே ராசை
உளமெலா மிடங்கொண்ட தெந்தாய்
வரைசெயா மேன்மேற் பொங்கிவாய் ததும்பி
வழிகின்ற தென்வசங் கடந்தே
இரைசெயென் னா தழைக்கவவ் வருளை
ஈந்தரு ளிற்றையிப் போதே.

8. போதெலாம் வீணிற் போக்கியே மாந்த
புழுத்தலைப் புலையர்கள் புணர்க்குஞ்
சூதெலாங் கேட்குந் தொறுமுனைப் பரவுந்
தூயர்கள் மனமது துளங்கித்
தாதெலாங் கலங்கத் தளருத லழகோ
தனியருட் சோதியா லந்த
வாதெலாந் தவிர்த்துச் சுத்தசன் மார்க்கம்
வழங்குவித் தருளுக விரைந்தே.

9. விரைந்துநின் னருளை யீந்திடல் வேண்டும்
விளம்புமித் தருணமென் னுளந்தான்
கரைந்தது காதல் பெருகிமேற் பொங்கிக்
கரையெலாங் கடந்தது கண்டாய்
வரைந்தெனை மணந்த வள்ளலே யெல்லாம்
வல்லவா வம்பல வாணா
திரைந்தவென் னுடம்பைத் திருவுடம் பாக்கித்
திகழ்வித்த சித்தனெ சிவனே.

10. சிவந்திகழ் கருணைத் திருநெறிச் சார்புந்
தெய்வமொன் றேயெனு திறமும்
நவந்தரு நிலைகள் சுதந்தரத் தியலும்
நன்மையு நரைதிரை முதலாந்
துவந்துவந் தவிர்த்துச் சுத்தமா தியமுச்
சுகவடி வம்பெறும் பேறுந்
தவந்திக ழெல்லாம் வல்லசித் தியுநீ
தந்தருள் தருணமீ தெனக்கே.



6. வீட்டினார் சுடுவெண் ணீறு
மெய்க்குஅணிந் திடுவர் போலும்
காட்டிநின் றாடல் பேணும்
கருத்தினை உடையர் போலும்
பாட்டினார் முழவம் ஓவாப்
பைம்பொழில் பழனை மேயார்
ஆட்டினார் அரவந் தன்னை
ஆலங்காட்டு அடிக ளாரே.

7. தாளுடைச் செங்கமலத்
தடங்கள்சே வடியர் போலும்
நாளுடைக் காலன் வீழ
உதைசெய்த நம்பர் போலும்
கோளுடைப் பிறவி தீர்ப்பார்
குளிர்பொழிற் பழனைமேய
ஆளுடை அண்ணல் போலும்
ஆலங்காட்டு அடிக ளாரே.

8. கூடினார் உமைத னோடே
குறிப்புடை வேடம் கொண்டு
சூடினார் கங்கை யாளைச்
சுவறிடு சடையர் போலும்
பாடினார் சாம வேதம்
பைம்பொழிற் பழனை மேயார்
ஆடினார் காளி காண
ஆலங்காட்டு அடிக ளாரே.

9. வெற்றரைச் சமண ரோடு
விலையுடைக் கூறை போர்க்கும்
ஒற்றரைச் சொற்கள் கொள்ளார்
குணங்களை உகப்பர் போலும்
பெற்றமே உகந்தங்கு ஏறும்
பெருமையை உடையர் போலும்
அற்றங்கள் அறிவர் போலும்
ஆலங்காட்டு அடிக ளாரே.

10. மத்தனாய் மலையெ டுத்த
அரக்கனைக் கரத்தோடு ஒல்க
ஒத்தினார் திருவி ரலால்
ஊன்றியிட்டு அருள்வர் போலும்
பத்தர்தம் பாவம் தீர்க்கும்
பைம்பொழிற் பழனை மேய
அத்தனார் நம்மை ஆள்வார்
ஆலங்காட்டு அடிக ளாரே.

திருச்சிற்றம்பலம்

## திருவாசகம்

### 2. பிடித்த பத்து

(திருத்தோணிபுரத்தில் அருளியது)

**முத்திக் கலம்புரைத்தல்**

**- மாணிக்கவாசகர்**

*எட்டாம் திருமுறை பாடியவர். பாண்டிய நாட்டிலுள்ள திருவாதவூரில் சம்புபாதாசிருதர் சிவஞானவதியாரின் மகனாகப் பிறந்தவர். கல்வி கேள்வியறிவு நிரம்பிய இவரைப் பாண்டியன் அரிமர்த்தனன் தன் முதலமைச்சராகப் பணியில் அமர்த்தினான். தென்னவன் பிரமராயன் என்ற பட்டமும் தந்தான். இறைவன் இவருக்காக நரிகளைப் பரிகளாக்கிப் பாண்டியனிடம் ஒப்படைத்தார். குதிரைகள் மீண்டும் நரிகளாக மாறியதால் பாண்டியன் பலவாறு தண்டனைகள் வழங்கினான். பிட்டுக்கு மண் சுமந்தும், பிரம்படி பட்டும் இறைவன் பல திருவிளையாடல்களைச் செய்தான். மனமுருகிய மாணிக்கவாசகர் பாடல்களை பாடினார். 'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' என்று கூற மாணிக்கவாசகர் திருக்கோவையார் நூலைப் பாடினார் எனவும் கூறுவர்.*

*சென்ற திருப்பதிகத் திருப்பாண்டிப் பாண்டிப் பதிகப் பத்தாம் படலின் ஈற்றடியில் **'சிக்கெனச் சேர்மின்களே'** என்ற அடிகளார் அதற்கு அடுத்ததாக விளங்கும் பிடித்த பத்தின் பத்துப் பாடல்களிலும் 'சிக்கெனப் பிடித்தேன்' என்று கூறும் அழகைக் காண்க.*



3. பழம்பிழி மதுரப் பாட்டல வெனினும்
பத்தரும் பித்தரும் பிதற்றும்
கிழம்பெறும் பாட்டுங் கேட்பதுன் னுள்ளச்
கிளர்ச்சியென் றறிந்தநாண் முதலாய்
வழங்குநின் புகழே பாடுறு கின்றேன்
மற்றொரு பற்றுமிங் கறியேன்
சழங்குடை யுலகிற் றளருத லழகோ
தந்தையுந் தாயுநீ யலையோ.

4. தாயுமென் னொருமைத் தந்தையும் ஞான
சபையிலே தனிநடம் புரியுந்
தூயநின் பாதந் துணையெனப் பிடித்தேன்
தூக்கமுஞ் சோம்பலுந் துயரும்
மாயையும் வினையு மறைப்புமா ணவமும்
வளைத்தெனைப் பிடித்திடல் வழக்கோ
நாயினே னினியோர் கணந்தரிப் பறியேன்
நல்லருட் சோதிதந் தருளே.

5. சோதியே லெனைநீ சோதனை தொடங்கிற்
சூழுயிர் விடத்தொடங் குவனான்
நீதியே நிறைநின் றிருவரு ளறிய
நிகழ்த்தினே னிச்சய மிதுவே
ஓதியே யுணர்தற் கரும்பெரும் பொருளே
உயிர்க்குயி ராகிய வொளியே
ஆதியே நடுவே யந்தமே யாதி
நடுவந்த மில்லதோ ரறிவே.

6. இல்லையுண் டெனுமிவ் விருமையுங் கடந்தோர்
இயற்கையி னிறைந்தபே ரின்ப
அல்லையுண் டெழுந்த தனிப்பெருஞ் சுடரே
அம்பலத் தாடல்செய் யமுதே
எல்லையின் றடியேன் றுயரெலாந் தவிர்த்து
வழங்குக நின்னருள் வழங்கல்
நல்லையின் றலது நாளையென் றிடிலோ
நானுயிர் தரிக்கல னரசே.

# திருவருட்பா

## 1. பிரிவாற்றாமை (6–ஆம் திருமுறை)

**- வள்ளலார்**

***வ**ள்ளலார் சிதம்பரத்திற்கு அருகே மருதூரில் இராமையா பிள்ளைக்கும் சின்னம்மைக்கும் மகனாகத் தோன்றினார். இளமையிலேயே தெய்வத்திருவருள் பெற்றார். சமய ஈடுபாடு கொண்டு பெரியபுராணச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். மணமான பின்பு துறவறத்தை மேற்கொண்டார். ஒன்றே குலம் ஒருவனே தேவனும் என்ற திருமூலர் நெறியின் விளக்கமான சமரச சன்மார்க்க நெறியைப் பரப்புவதைத் தன் வாழ்நாள் நோக்கமாகக் கொண்டார். ஜீவகாருண்யமே சிவகாருண்யத்தின் திறவுகோல் என்று நம்பினார். வள்ளலார் மனுமுறை கண்ட வாசகம், சீவகாருண்ய ஒழுக்கம் என்ற உரைநடை நூல்களையும் இயற்றியுள்ளார். பசியின் கொடுமையையுணர்ந்தவர் பசிப்பிணி போக்குவதற்கென வடலூரில் சத்திய தருமச்சாலையை நிறுவினார்.*

1. தந்தையுந் தாயுங் குருவும்யான் போற்றுஞ்
சாமியும் பூமியும் பொருளுஞ்
சொந்தநல் வாழ்வு நேயமுந் துணையுஞ்
சுற்றமு முற்றுநீ யென்றே
சிந்தையுற் றிங்கே யிருக்கின்றே னிதுநின்
திருவுளந் தெரிந்ததே யெந்தாய்
நிந்தைசெய் யுலகில் யானுளங் கலங்கல்
நீதியோ நின்னருட் கழகோ.

2. அழகனே ஞான வமுதனே யென்றன்
அப்பனே யம்பலத் தரசே
குழகனே யின்பக் கொடியுளங் களிக்குங்
கொழுநனே சுத்தசன் மார்க்கம்
கழகநேர் நின்ற கருணைமா நிதியே
கடவுளே கடவுளே யெனநான்
பழகநேர்ந் திட்டே னின்னுமிவ் வுலகிற்
பழங்கணா லழுங்குத லழகோ.



*இப்பதிகம் திருத்தோணிபுரத்தில் அருளப்பட்டது. திருத்தோணிபுரம் திருஞானசம்பந்தப் பெருமானின் அவதாரத் தலமான சீகாழித் திருப்பதியே.*

*“இதன் மூன்றாவது திருப்பாட்டில் இறைவனை அடிகள் ‘அம்மையே அப்பா’ என அழைத்திருத்தலே போலும்! ஞானசம்பந்தர் சீகாழியில் திருத்தோணிச் சிகரத்தைப் பார்த்து இவ்வாறு அழைக்க இறைவன் அங்ஙனமே அம்மை அப்பனாய் வந்து அருள்பாலித்தமையால், திருத்தோணியில் என்றும் அம்மையப்பர் வடிவமாயே இறைவன் எழுந்தருளியிருத்தலும் யாவரும் அறியப்பட்டனவாதல் அறிக” என்பார் திருமுறை அறிஞர் சிவத்திரு. அருணைவடிவேல் முதலியார் அவர்கள். இக்கருத்தே வாதவூரர் ஞானசம்பந்தருக்குப் பிற்பட்டவர் என்பதற்கு அரணாகும்.*

*எனக்குப் பிடித்த பத்து, உனக்குப் பிடித்த பத்து, நமக்குப் பிடித்த பத்து என்ற அன்பின் மேலீட்டால் இப்பத்து வழங்கப்படுதலால் பிடித்த பத்து என ஆயிற்றோ!*

### எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

1. உம்பர்கட்கு அரசே ஒழிவு அறநிறைந்த
யோகமே ஊத்தையேன் தனக்கு
வம்பு எனப்பழுத்து என்குடி முழுதுஆண்டு
வாழ்வுஅற வாழ்வித்த மருந்தே
செம்பொருள் துணிவே சீர்உடைக்கழலே
செல்வமே சிவபெருமானே
எம்பொருட்டு உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருள்வது இனியே.

2. விடைவிடாது உகந்த விண்ணவர் கோவே
வினையனேனுடைய மெய்ப்பொருளே
முடைவிடாது அடியேன் மூத்து அற மண் ஆய்
முழு புழுக் குரம்பையில் கிடந்து
கடைபடா வண்ணம் காத்து எனை ஆண்ட
கடவுளே கருணை மாகடலே
இடைவிடாது உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருள்வது இனியே.

3. அம்மையே அப்பா ஒப்பு இலாமணியே
அன்பினில் விளைந்த ஆர்அமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்து அலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருள்வது இனியே.

4. அருள்உடைச் சுடரே அளித்தது ஓர்கனியே
பெரும்திறல் அரும்தவர்க்கு அரசே
பொருள் உடைக்கலையே புகழ்ச்சியைக் கடந்த
யோகமே யோகத்தின் பொலிவே
தெருள் இடத்து அடியார் சிந்தையுள் புகுந்த
செல்வமே சிவபெருமானே
இருள் இடத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருள்வது இனியே.

5. ஒப்பு உனக்கு இல்லா ஒருவனே அடியேன்
உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே
மெய்ப்பதம் அறியா வீறுஇலியேற்கு
விழுமியது அளித்தது ஓர்அன்பே
செப்புதற்கு அரிய செழுஞ்சுடர் மூர்த்தி
செல்வமே சிவபெருமானே
எய்ப்பு இடத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருள்வது இனியே.

6. அறவையேன் மனமே கோயிலாக் கொண்டுஆண்டு
அளவு இலாஅனந்தம் அருளிப்
பிறவிவேர் அறுத்து என்குடி முழுது ஆண்ட
பிஞ்ஞகா பெரிய எம்பொருளே
திறவிலே கண்ட காட்சியே அடியேன்
செல்வமே சிவபெருமானே
இறவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருள்வது இனியே.



# அலகு – II
# செய்யுள்

மன்னன் பாராட்டுதல்.

தேர்மிசைவந்த மல்லன்சிதைந்த பேருறுப்பினோடும்
பார்மிசைக்கிடக்க நின்று பணைப்புயங்கொட்டியார்த்தான்
சீர்மிகுமல்லன்றன்னைச்சிறப் புறத்தழுவியெல்லாப்
போர்முகங்களுக்குநின்னைப் போல்பவரில்லையென்றான்.

14. விராடன் பலாயனனுக்குப் பலவரிசைகளளித்து
அவன் திறமையைப் புகழ்ந்து கூறுதல்.

மன்னவர்க்களிக்கத்தக்க வரிசைகளனைத்துநல்கி
முன்னவனாகிவை முனிமனங்களிக்குமாறு
தன்னருகணுகவைத்தித்தலத்தெதிரில்லையிந்த
இன்னமுதடுவோற்கென்றானியற்றிறல்விராடன்றானே.



7. பாசம் வேர்அறுக்கும் பழம் பொருள்தன்னைப்
பற்றும்ஆறு அடியனேற்கு அருளிப்
பூசனை உகந்து என்சிந்தையுள் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே
தேசுஉடை விளக்கே செழும்சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெருமானே
ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருள்வது இனியே.

8. அத்தனே அண்டர் அண்டமாய் நின்ற
ஆதியே யாதும் ஈறு இல்லாச்
சித்தனே பத்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெருமானே
பித்தனே எல்லா உயிரும் ஆய்த் தழைத்துப்
பிழைத்து அவை அல்லை ஆய்நிற்கும்
எத்தனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருள்வது இனியே.

9. பால்நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேன் உடைய
ஊனினை உருக்கி உள்ஒளி பெருக்கி
உலப்புஇலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம் புறம்திரிந்த
செல்வமே சிவபெருமானே
யான் உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருள்வது இனியே.

10. புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்நெடும் கோயிலாப் புகுந்துஎன்
என்பு எலாம் உருக்கி எளியை ஆய்ஆண்ட
ஈசனே மாசுஇலா மணியே
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்குஆம்
தொடக்கு எலாம் அறுத்த நல்சோதி
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருள்வது இனியே.

# நாலாயிர திவ்ய பிரபந்தம்

## 3. எட்டாம் பத்து – ஐந்தாம் திருவாய்மொழி – 'மாயக்கூத்தா'

**- மாணிக்கவாசகர்**

*வைணவ பக்தியியக்கத்தை ஒரு பேரலையாக மக்களிடையே கொண்டு சென்ற பெருமை பன்னிரு ஆழ்வார்களுக்கேயுரியது. ஆழ்வார்கள் ஆங்காங்கே உள்ள வைணவத் தலங்களையடைந்து அங்கு எழுந்தருளியுள்ள திருமாலைப் பாடிப் பரவசத்தில் ஆழ்ந்தார்கள். திருமாலுடைய திருக்கலியாண குணங்களில் ஆழ்ந்து ஈடுபட்டமையால் இவர்கள் ஆழ்வார்கள் என அழைக்கப்பட்டார்கள். இவர்களால் பாடப்பெற்ற 108 வைணவத் தலங்களும் வைணவர்களால் திவ்விய தேசங்கள் என்று போற்றப்படுகின்றன.*

*பன்னிரு ஆழ்வார்களும் திருமாலைப் போற்றிப் பாடிய பாடல்களை நாதமுனிகள் தொகுத்து அடைவுபடுத்தி நாலாயிர திவ்விய பிரபந்தமாக வெளியிட்டார். வைணவப் பெருமக்களின் போற்றுதலுக்குரிய இந்நூல் வைணவக் கோயில்களில் வழிபாட்டு நூலாகவும் ஆவதற்கு ஸ்ரீ இராமாநுஜர் வழிவகுத்தார். நாலாயிரம் பாடல்கள் என்பது இருவகைகளில் கணக்கிடப்படுகிறது. பெரிய திருமால், சிறிய திருமால் இரண்டு நூல்களையும் கண்ணிகளாக்கிக் கணக்கிட்டு நாலாயிரம் என்ற தொகையைக் கொள்வது ஒருநிலை. பொதுவாக பன்னிரு ஆழ்வார்கள் பாடிய 4000 பாடல்கள் என்று கொள்வதே மரபாக உள்ளது.*

**1. மாயக்கூத்தா! வாமனா!**<br>
**வினையேன் கண்ணா! கண் கை கால்**<br>
**தூய செய் யமலர்களாச்**<br>
**சோதிச் செவ்வாய் முகிழதாச்**<br>
**சாயல் சாமத் திருமேனி**<br>
**தண்பா கடையாத் தாமரைநீள்**<br>
**வாசத் தடம்போல் வருவானே!**<br>
**ஒருநாள் காண வாராயே!**

**2. காண வாராய் என்று என்று**



வீரரில்வீரனான வென்றிவேல் விராடன் மெச்சித்<br>
தேரின்மேல் வந்த மல்லன்றனக்கெலாச் சிறப்புஞ்செய்தான்.

8. மற்றைநாள்தருமபுத்திரன், மன்னனிடம் முஇந்தமல்லனைப் பலாயனன்வெலத்தக்கான்முஎன்ன, அரசன் அவனையழைப்பித்தல்.

அன்றுபோய்மற்றை நாளினரசனோடறத்தின் மைந்தன்<br>
வென்ற மாமல்லன்றன்னை வெல்லுதற்குரியமல்லன்<br>
இன்று நின்மடையர் தம்மிற் பலாயனனென் போன்றன்னை<br>
அன்றிவேறில்லை யென்றானரசனுமழைமினென்றான்.

9. பலாயனனென்று மறுபேருள்ளவீமன் மற்போர்க்குச் சித்தனாகஅங்கு வருதல்.

பைம்பொன்மாமேரு வெற்பின்பராரையைச் சோதிநேமி<br>
விம்பமாய்வளைந்த தென்னவிளங்கு பொற்கச்சைச்சேர்த்தித்<br>
தம்பமாமென்னத்தக்கதண்டொடுதரணிவீழா<br>
உம்பராரமுதமுண்டவுரவினான் விரைவில் வந்தான்.

10. இரண்டுகவிகள் - பலாயனனும் முன்னர்வெற்றி பெற்றிருந்த மல்லவீரனும் பொருதலைத் தெரிவிக்கும்

கதையுடைக்காளைவந்து கடுந்திறன்மல்லன்றன்னோடு<br>
உதயமோடத்தமென்னு மோங்கலோரிரண்டு சேர்ந்து<br>
துதைவுறப்பொருவதே போற்றோள்புடைத்துருமினார்த்துப்<br>
பதயுகத்தாலுந்தத்தம் பாணிகளாலுஞ் சேர்ந்தார்.

11. உதைத்தனர்வீசிவன் போரடுங்கொடுகரங்களெற்றிப்<br>
புதைத்தனர்விரல்கண் மெய்யிற் புருவமுக்கும்வாயிற்<br>
சிதைத்தனர்புயங்க ளென்னுஞ்சிலம்பு கடாக்கத்தாக்கப்<br>
பதைத்தனரோடியோடிப் பற்றினர் மீளமீள.

12. வீமன் வந்த மல்லனையழித்தல்.

கற்றனகாயமெல்லாங்கண்டு கண்களிக்கக்காட்டி<br>
உற்றனர்நின்ற போதிலுதையிட்ன புதல்வனூரு<br>
மற்றவன்மருங்கு பற்றவன்கரமிடறுபற்றச்<br>
செற்றனடிம்பன்றன்னைச்செற்ற வெங்கொற்றத்தோளான்.

13. வந்த மல்லனைவென்றுநின்ற வீமனை

சொல்லினுக் குததிதோய்கைத் தொன்முனி யென்ன வன்போர்
மல்லினுக் கொருவன்யானேவாசவ னென்று வந்தான்.

2. அந்த மல்லனது வருணனை

அண்டமாமுகடோடொத்த சென்னியனவனிமுற்றும்
கொண்டமாமேருவொத்தகுங்மக்கடகத்தோளான்
சண்டமாருதத்தோடொத்தவலியினன்றந்தியெட்டின்
கண்டமார்முகத்தினீண்டகையெனத்திரண்டகாலான்.

3. அந்தமல்லன் பலமல்லர்தன்னைச் சூழ்ந்துவர, விராடனவைக்களத்தை யடைதல்

ஆயிரமல்லர்தன்னையணிநிழலென்னச்சூழப்
பாயிரும்புரவித்திண்டேர்மிசைவரும் பரிதிபோல
மாயிருஞாலந்தன்னின்மற்றிவற்கெதிரின்றென்னச்
சேயிருந்தடக்கை வேந்தன்றிருந்தவையதனைச் சேர்ந்தான்.

4. வந்தவன் முமற்போருக்கு என்னைப்போன்றவரில்லைமு என்ன, விராடன் அவனுக்குச் சிறப்புச்செய்து தன்னிடமுள்ள மல்லரை நோக்குதல்.

மன்னனைவணங்கிநின்று வலியுடைமல்லின்போருக்கு
என்னலதில்லையிந்த வெழுகடல்வட்டத்தென்றான்
கொன்னவில்வேலினானுங்கொடுப்பனகொடுத்துமுன்னம்
தன்னுழைவைகுமல்லர்தங்களை நோக்கினானே.

5. மற்றொழிலில்வல்லவர்அநேகர் அந்த மல்லனுடன் தனித்தனி பொருதல்.

அந்தமற்றொழிலின்மிக்கோரநேகர்நீட சனியொப்பார்
வந்தமற்றலை வன்றன்னை வருதிநீயெம் மொடென்று
முந்தமற்கலை நூல்சொன்னமுறைமையினரசன்காணச்
சந்தமற்சமரஞ் செய்தார்தனித்தனி யொருவராக.

6. இதுவும் அடுத்தகவியும்-குளகம்: அரசனிடத்திருந்த மல்லர் வந்தமல்லனோடு தனித்தனிபொருது தோற்க, அரசன்வந்தவனை விசேஷமாகச் சம்மானித்தலைக்கூறும்

7. ஒரொருமல்லராக வொருதனிமல்லன்றன்னோடு
ஆரமருடற்றிமல்லரனை வருமழிந்த பின்னர்



கண்ணும் வாயும் துவர்ந்து அடியேன்
நாணி நல்நாட்டு அலமந்தால்
இரங்கி ஒருநாள் நீ அந்தோ!
காண வாராய்; கருநாயிறு
உதிக்கும் கருமா மாணிக்க
நாணல் மலைபோல் சுடர்ச்சோதி
முடிசேர் சென்னி அம்மானே!

3. முடிசேர் சென்னி அம்மா! நின்
மொய்பூந் தாமம் தண்துழாய்
கடிசேர் கண்ணிப் பெருமானே!
என்று என்று ஏங்கி அழுதக்கால்
படிசேர் மகரக் குழைகளும்
பவள வாயும் நால்தோளும்
துடிசேர் இடையும் அமைந்ததுஓர்
தூநீர் முகில்போய் தோன்றாயே.

4. தூநீர் முகில்போல் தோன்றும் நின்
சுடர்கொள் வடிவும் கனிவாயும்
தேநீர்க் கமலக் கண்களும்
வந்துஎன் சிந்தை நிறைந்தவா
மாநீர் வெள்ளி மலைதன்மேல்
வண்கார்நீல முகில்போலத்
தூநீர்க் கடலுள் துயில்வோனே!
எந்தாய்! சொல்ல மாட்டேனே.

5. சொல்ல மாட்டேன் அடியேன் உன்
துளங்கு சோதித் திருப்பாதம்
எல்லை இல்சீர் இளநாயிறு
இரண்டு போல்என் உள்ளவா
அல்லல் என்னும் இருள்சேர்தற்கு
உபாயம் என்னே! ஆழிசூழ்
மல்லை ஞாலம் முழுது உண்ட
மாநீர்க் கொண்டல் வண்ணனே!

6. கொண்டல் வண்ணா! குடக்கூத்தா!
வினையேன் கண்ணா! கண்ணா! என்
அண்ட வாணா! என்று என்னை

ஆளக் கூப்பிட்டு அழைத்தக்கால்
விண்டன் மேல்தான் மண்மேல்தான்
விரிநீர்க் கடல்தான் மற்றுத்தான்
தொண்ட னேன்உன் கழல்காண
ஒருநாள் வந்து தோன்றாயே.

7. வந்து தோன்றாய் அன்றேல் உன்
வையம் தாய மலரடிக்கீழ்
முந்தி வந்து யான் நிற்ப
முகப்பே கூவிப் பணி கொள்ளாய்
செந்தண் கமலக் கண்கை கால்
சிவந்த வாய்ஓர் கருநாயிறு
அந்தம் இல்லாக் கதிர் பரப்பி
அலர்ந்தது ஒக்கும் அம்மானே!

8. ஒக்கும் அம்மான் உருவம் என்று
உள்ளம் குழைந்து நாள்நாளும்
தொக்க மேகப் பல்குழாங்கள்
காணுந்தோறும் தொலைவன்நான்
தக்க ஐவர் தமக்காய் அன்று
ஈர்ஐம் பதின்மர் தாள்சாயப்
புக்க நல்தேர்த் தனிப்பாகா!
வாராய் இதுவோ பொருத்தமே?

9. ‘இதுவோ பொருத்தம்? மின் ஆழிப்
படையாய்! ஏறும் இருஞ்சிறைப்புள்
அதுவே கொடியா உயர்த்தானே!’
என்றுஎன்று ஏங்கி அழுதக்கால்
எதுவே யாகக் கருதுங்கொல்?
இம்மா ஞாலம் பொறை தீர்ப்பான்
மதுவார் சோலை உத்தர
மதுரைப் பிறந்த மாயனே!

10. பிறந்த மாயா! பாரதம் பொருதமாயா! நீ இன்னே
சிறந்த கால்தீ நீர் வான்மண் பிறவும் ஆயபெருமானே!
கறந்த பாலுள் நெய்யே போல் இவற்றுள் எங்கும் கண்டுகொள்
இறந்து நின்ற பெருமாயா! உன்னை எங்கே



காண்கேனே?

11. ‘எங்கே காண்கேன் ஈன்துழாய்
அம்மான் றனையான்?’ என்று என்று
அங்கே தாழ்ந்த சொற்களால்
அந்தண் குருகூர்ச் சடகோபன்
செங்கேழ் சொன்ன ஆயிரத்துள்
இவையும் பத்தும் வல்லார்கள்
இங்கே காண இப்பிறப்பே
மகிழ்வர் எல்லியும் காலையே.

## வில்லி பாரதம்

### 4. மற்போர் சருக்கம்

**- வில்லிப்புத்தூரார்**

***வி**ல்லிப்புத்தூராழ்வார் ஒரு தீவிர வைணவ பக்தர். சிறந்த தமிழ் அறிஞர். தமிழில் வரும் படைப்புகளில் தவறு இருக்கக்கூடாது என்பதில் மிகுந்த அக்கறை உள்ளவர். வில்லிப்புத்தூரார் வியாச பாரதத்தையே முதனூலாகக் கொண்டு இந்நூலை இயற்றினார். 18 பருவங்களாய் பாரதம் பாடினார். திருமுனைப்பாடி நாட்டில் சனியூரில் வீரராகவன் என்ற வைணவ அந்தணருக்கு மகனாய்ப் பிறந்தவர் வில்லிப்புத்தூரார். வடமொழிப் புலமை மிக்கவர். வக்க பகையையாண்ட கொங்கர் குலமன்னன் வரபதியாட் கொண்டானால் இந்நூல் எழுதும்படி தூண்டப்பட்டு அவரால் ஆதரிக்கப்பட்டவர். வில்லிப்புத்தூரார் புலவர்களிடம் போட்டி வைத்து யார் தோல்வி அடைகிறார்களோ அவர்களின் காதுகளை வென்றவர் அறுக்க வேண்டும் என்று கூறினார். இப்படியாக பல பேருடைய காதுகளை போட்டியில் வென்று அறுத்தார். இந்தச் செயலைத் தடுக்க அருணகிரியார் முயன்றார். தான் பாடிய பாடலுக்கு பதில் கூற முடியாமல் வில்லிப்புத்தூரார் தோற்றார். தன் பாவத்தைத் தீர்க்க மகாபாரதத்தை தமிழில் எழுதினார். அதுவே வில்லிபாரதம் என்று அழைக்கப்படுகிறது.*

**1. அல்லினுக் கிந்து வென்னவாங்கவ ருறையு நாளில்**
**வில்லினுக் கிராம னென்னவேலினுக் கிளையோ னென்னச்**